1973 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

செவிலி உதவிப் பயிற்சியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, கோவையில் செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மருதாசலம் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை 48-வது விதியின் கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வரும் என சுருக்கமாக அவர் விளக்கலாம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, 3—3—73 ஆம் தேதி கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 40 செவிலி உதவி பயிற்சியாளர்களை திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் அங்கு பணிபுரிந்த சுமார் 140 செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தினால் நோயாளிகளுக்கும், பொது மக்களுக்கும் தாங்க முடியாத துன்பம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கின்ற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி விவாதிக்க சபையின் மற்றைய அலுவல்களை ஒத்தி வைக்கக் கோருகிறேன்.

* *மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவரவர்களே, செவிலிப் பணி உதவியாளர்கள் என்ற நிலையிலே உள்ள எம்.என்.ஓ.க்கள் யாரும் வேலையிலே இருந்து நீக்கப்படவில்லை. செவிலிப் பணி உதவியாளர் அப்ரண்டிஸ்—பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கக் கூடிய 40 பேர் பயிற்சி பெறுகிற ஆறு மாதத்திற்குள்ளாக அவர்கள் தங்கள் பயிற்சி பெற வேண்டிய பாட திட்டத்திலுள்ளவாறு வார்டுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது—'ஸ்வாபிங்'—சோப்புப் போட்டு தண்ணீரால் கழுவுவது—ஆகிய இந்த வேலையைச் செய்ய மறுத்த காரணத்தால் பயிற்சி காலத்திலேயே

பயிற்சி பெற மறுக்கிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பயிற்சியை மருத்துவக் கல்லூரியினுடைய மேலாளர் அவர்கள் உடனடியாக நிறுத்தியிருக்கிறார்கள். பயிற்சி காலத்திலேயே பயிற்சிக்குரிய பாட வேலைகளைச் செய்ய மாட்டோம் என்று சொல்வது பயிற்சி பெறுகிறவர்களுக்கு அழகல்ல. அவர்களுக்கு ஆதரவாகவும், தூண்டி விளைவுக்கு ஊக்கப்படுத்தியும் எம்.என்.ஓ.க்கள் 2 ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தார்கள். இங்கே, அந்த எம்.என்.ஓ.க்களின் தலைவர் வந்தபோது, நாங்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஏதோ ஒரு காரணத்தால், வேலை நிறுத்தம் செய்ய எண்ணினாலும் 3 ஆம் தேதி வேலை நிறுத்தம் இல்லை, என்று தெரிவித்தார்கள். ஆகவே, இப்போது சகஜ நிலைமை— அமைதியான நிலை தோன்றி இருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்கள் எப்படிப் பயிற்சி பெற வேண்டுமோ, அப்படிப் பயிற்சி பெற மாட்டோம் என்று சொல்வார்களேயானால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க எந்த அரசாங்க இலாக்காவாலும் முடியாது. செவிலி உதவிப் பணியாளர்களாக உள்ளவர்கள் தான் அப்படிச் செய்ய வேண்டும் என்று பாட திட்டம் இருக்கிறது. நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம் என்று சொல்கிறார்கள். பாடத் திட்டத்திலேயே, வேலை முறையிலேயே அந்தப் பணி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை மற்றவர்களிடம் மாற்ற வேண்டுமென்கிறார்கள்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே 114 நர்சிங் அஸிஸ்டண்டுகள் இருக்கிறார்கள். இவர்களுடைய வேலையை லஸ்கர்களிடம் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். அங்கே 10 லஸ்கர்கள் இருக்கிறார்கள். இந்த 114 பேர்கள் வேலையை அந்தப் பத்து பேர்களிடம் விட வேண்டும் என்றால், மருத்துவ மனை துப்புரவு செம்மையாக இருக்காது. ஆகவே, அப்படி அவர்களிடத்திலே தான் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தால் 114 பேரில் 20 பேரையாவது குறைத்துவிட்டு, 20 லஸ்கர்களை அந்த இடத்தில் நியமிப்பது பற்றி கவனித்தாக வேண்டும். மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளின் நன்மையை யாவரும் கருத வேண்டும். மேலும் அவர்கள் கொடுத்துள்ள வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலனை